கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත් සභාව
Department of Co-operative Development
Northern Provincial Council
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය
Elders' Home Complex., Kandy Road, Kaithady,Jaffna

My No:- NP/15/04/02/CCD/CI

Date:-2024.12.24

சுற்றறிக்கை இல – 07/2018 (2)

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்,

**வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களினது இயக்குநர் சபைக்கான படி வழங்கல்.**

2025.01.01இலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் எனது 2020.02.05ஆம் திகதிய 07/2018 (1) இலக்க சுற்றறிக்கை இத்தால் பின்வருமாறு பிரதியீடு செய்யப்படுகின்றது.

பிரிவு – 2)

2.1 ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில், சமகாலத்தில் ஒருவர் தலைவராக அல்லது இயக்குநர் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அவை தொடர்பான தகவல்களை தான் பதவி வகிக்கும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தினதும் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

2.2 அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில், சமகாலத்தில் ஒருவர் தலைவராக அல்லது இயக்குநர் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் எனது 07/2018 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அவர் தமக்குரிய படியினை தாம் விரும்பிய ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும் தான் தலைவராக அல்லது இயக்குநர் சபை உறுப்பினராக சேவையாற்றும் ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பெறப்படும் தலைவர் அல்லது இயக்குநர் சபை உறுப்பினர் படியானது எனது 2018.11.26ஆம் திகதிய 07/2018 இலக்க சுற்றறிக்கையின், முதலாம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் உச்ச எல்லைக்கு மேற்படாதும், பிரிவுகள் 1.1, 1.2, 1.3இல் குறிப்பிடப்பட்டதற்கமையவும் இருத்தல் வேண்டும்.

2.3 ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் சமகாலத்தில் தலைவராக அல்லது இயக்குநர் சபை உறுப்பினராக சேவையாற்றும் போது, பெற்றுக்கொள்ளப்படும் தலைவர் அல்லது இயக்குநர் சபை உறுப்பினர் படி தொடர்பான தகவல்களை அத்தகைய ஒவ்வொரு சங்கமும், அவர் தலைவராக அல்லது இயக்குநர் சபை உறுப்பினராக சேவையாற்றும் சங்கங்களிற்கு மாதாந்தம் அனுப்பி வைத்தல் வேண்டும். இதற்கமைவாகவே கொடுப்பனவை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் குறித்த கொடுப்பனவை அங்கீகரித்தல் வேண்டும்.

ந.திருலிங்கநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாணம்.

ந.திருலிங்கநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதிகள் -

1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், .................. - நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக
2. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா - தகவலுக்காக

ஆணையாளர் / කොමසාරිස / Commissioner – 021 205 7063
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant – 021 223 2212
தொலைநகல் / ෆැක්ස් / fax – 021 205 7062
பொது / පොදු / Gen – 021 205 7064
E- mail: - ccdnp@mail.com